"முயற்சி தன் மெய்வருத்தக் கூலி தரும்"!!

VCC

www.vidiyalarni.blogspot.com

# விடியல்

**TNPSC பயிற்சி மையம், ஆரணி, போளூர், வேலூர்**

செல்: **9894316951, 9578533174, *9047936586.***

## V.A.O தேர்வு – பொதுத் தமிழ் மாதிரி வினாத்தாள்

---

1. பிரித்து எழுதுக : 'அதுவல்லதூதியம்'

A) அது + வல்லது + ஊதியம் B) அதுவல்ல + ஊதியம்

C) அது + வல்ல + ஊதியம் ***D) அது + அல்லது + ஊதியம்.***

2. 'அறத்துக்கு' – எனும் சொல்லைப் பிரித்தெழுதுக.

A) அறத்து + உக்கு B) அறம் + உக்கு

***C) அறம் + அத்து + கு*** D) அறம் + அத்துக்கு.

3. பிரித்தெழுதுக: 'மணவணி'

A) மண + அணி ***B) மணம் + அணி***

C) மா + அணி D) மணா + அணி.

4. எதிர்ச்சொல் தருக – 'நல்லது'

A) கெட்டது B) சிறப்பானது C) வல்லது ***D) அல்லது.***

5. எதிர்ச்சொல் தருக – 'இசை'

A) புகழ் B) இகழ் C) *வசை* D) நசை.

6. 'அஞ்சாமை' – எதிர்ச்சொல் காண்க.

A) எஞ்சாமை B) *அஞ்சுதல்* C) பயப்படாமை D) மனத்திண்மை.

7. பொருந்தாததைக் கண்டறிக.

A) கிரேக்கம் B) இலத்தீன் C) *இந்தி* D) ஹீப்ரு.

8. பொருந்தாததைத் தேர்வு செய்க.

A) *கரந்தை* B) முல்லை C) குறிஞ்சி D) மருதம்.

9. பொருந்தாச் சொல்லைத் தேர்வு செய்க.

A) குரல் B) துத்தம் C) கைக்கிளை D) *பெருந்திணை.*

10. பொருந்தாச் சொல்லைத் தேர்வு செய்க.

A) குட்டி B) கன்று C) *குழந்தை* D) குஞ்சு.

11. சந்திப் பிழையற்ற தொடரைத் தேர்க.

A) *அந்தப் பத்திரிக்கைச் செய்திகளைத் தந்தை படித்துக் காட்டினார்*

B) அந்த பத்திரிக்கைச் செய்திகளைத் தந்தைப் படித்துக் காட்டினார்

C) அந்த பத்திரிக்கை செய்திகளை தந்தை படித்து காட்டினார்

D) அந்தப் பத்திரிக்கைச் செய்திகளைத் தந்தை படித்து காட்டினார்.

12. சந்திப் பிழை இல்லாத் தொடரைத் தேர்வு செய்க.

A) பொருட்த் தேடினான் B) *தவச்சிறிது*

C) சால பேச்சினான் D) தோழனுக்கு கொடுத்தான்

VIDIYAL
VIDIYAL

13. ஒருமை பன்மை பிழைகளை நீக்குக.

A) பூனை எலியைப் பிடித்தன B) பூனை எலியைப் பிடித்தார்

C) ***பூனை எலியைப் பிடித்தது*** D) பூனைகள் எலியைப் பிடித்தது.

14. ஒருமை பன்மை பிழையில்லாத் தொடரைக் கண்டுபிடி.

A) ஆந்தை அலறுகின்றன B) காக்கைகள் கரையும்

C) கோட்டான் குழறுகின்றன D) ***குயில் கூவும்.***

15. மரபுப் பிழையை நீக்குக.

A) பனம் பிஞ்சு B) பனங்குருத்து C) ***பனங்குறும்பை*** D) பனங்கன்று.

16. மரபுப் பிழையற்ற தொடரை அறிக.

A) ***குரங்கு அலப்பும்*** B) குரங்கு கீச்சிடும்

C) குரங்கு கத்தும் D) குரங்கு முழங்கும்.

17. பிற மொழிச் சொற்களற்ற தொடரைக் காட்டுக.

A) நாளை மறுநாள் முழு ராத்திரி

B) நாளை மறுதினம் அமாவாசை

C) நாளை மறுநாள் இருள் ராத்திரி

D) ***நாளை மறுநாள் காருவா.***

18. ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்ச்சொல் அறிக: Mammal

A) அம்மா B) பெட்டி C) ***பாலூட்டி*** D) நோய்.

19. பிற மொழிச் சொற்களற்ற தொடரைத் தேர்வு செய்க.

A) நேற்றைய பேப்பரில் வந்த செய்தி

B) நேற்றைய பத்திரிக்கையில் வந்த விஷயம்

C) நேற்றைய பத்திரிக்கையில் வந்த செய்தி

D) ***நேற்றைய தாளிகையில் வந்த செய்தி.***

20. 'Nest' – எனும் ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்ச் சொல் அறிக.

A) அடுத்து B) மற்றது C) ***கூடு*** D) கழுத்து.

21. நேரான தமிழ்ச் சொல் தேர்க – 'Media'

A) ***ஊடகம்*** B) தகவல் தொடர்புச் சாதனம்

C) தொடர்பியல் D) இணையம்.

22. 'ஏஜென்சி' - என்பதன் தமிழ்ச் சொல்

A) தொடர்பகம் B) மொத்த வணிகம்

C) ***முகவாண்மை*** D) சில்லரை வணிகம்.

23. நிரை, நிறை என்பவற்றின் ஒலி வேறுபாடறிந்து பொருள் கூறுக.

A) கூட்டம், வரிசை B) வரிசை, கூட்டம்

C) ***வரிசை, எடை*** D) அளவு, மிகுதி.

24. சீரிய, சீறிய – ஒலி வேறுபாடறிந்து சரியான பொருள் கூறுக.

A) ***மேலான, கோபித்த*** B) காலம், உணர்வு

C) கோபித்த, மேலான D) வீரம், மரம்.

25. கழகம், கலகம் – ஒலி வேறுபாடறிந்து சரியான பொருள் கூறுக.

A) கட்சி அலுவலகம, கலக்கமடைதல் B) உறுதி, அதிர்ச்சி

C) அறிஞர் அவை, ஒழிதல் D) ***கூட்டமைப்பு, சண்டை உருவாதல்.***

VIDIYAL
VIDIYAL

26. ‘ஏ’ – எனும் ஓரெழுத்தொருமொழியின் பொருளைக் காண்க.

A) கருவி B) பொருள் C) *அம்பு* D) எழுத்து.

27. ‘தா’ – எனும் ஓரெழுத்தொருமொழியின் பொருளைக் காண்க.

A) *கொடு* B) இரத்தல் C) தருதல் D) தீமை.

28. ‘வா’ – எனும் ஓரெழுத்தொருமொழியின் பொருளைக் காண்க.

A) அழைத்தல் B) வரவேற்பு C) *வருதல்* D) வருக.

29. ‘மை’ – எனும் ஓரெழுத்தொருமொழியின் பொருளைக் காண்க.

A) பதித்தல் B) பஞ்சம் C) நுரை D) *மேகம்.*

30. ‘எழுதினான்’ – என்பதன் வேர்ச்சொல் காண்க.

A) எழு B) எழுக C) *எழுது* D) எழுதி.

31. ‘அகற்றாதீர்’ – என்பதன் வேர்ச்சொல் காண்க.

A) அகல் B) *அகற்று* C) அகன்று D) அகன்ற.

32. ‘கண்டான்’ – என்பதன் வேர்ச்சொல் காண்க.

A) கான் B) கண்டு C) கண்ட D) *காண்.*

33. ‘வந்தான்’ – என்பதன் வேர்ச்சொல் காண்க.

A) வரு B) வந்த C) *வா* D) வருக.

34. ‘மகிழ்’ – எனும் வேர்ச்சொல்லின் வினைமுற்றைக் காண்க.

A) மகிழ்ந்த B) மகிழ்ந்து C) *மகிழ்ந்தாள்* D) மகிழ்ந்தவர்.

35. ‘மருண்டான்’ – எனும் சொல்லின் வினையெச்சம் காண்க.

A) மருண்ட B) *மருண்டு* C) மருண்டல் D) மருண்டவர்.

36. ‘அணை’ – எனும் வேர்ச்சொல்லைத் தொழிற்பெயராக்குக.

A) அனைத்தல் B) அணைக்கும் C) அணைத்தாள் D) *அணைத்தல்.*

37. ‘தின்’ – என்பதன் பெயரெச்சம் காண்க.

A) தின்றன B) தின்கின்றன C) *தின்ற* D) தின்று.

38. ‘உடுத்த’ – என்பதன் வினையாலணையும் பெயர்.

A) *உடுத்தவர்* B) உடு C) உடுத்து D) உடுப்பு.

39. அகர வரிசைப்படி சொற்களைச் சீர் செய்க.

A) குருவி, மேளம், வானம்பாடி, சக்கரம்

B) சக்கரம், குருவி, வானம்பாடி, மேளம்

C) *குருவி, சக்கரம், மேளம், வானம்பாடி*

D) சக்கரம், வானம்பாடி, குருவி, மேளம்.

40. சொற்களை அகர வரிசைப்படி தருக.

A) உழும், அழும், ஆடும், ஈடு B) *அழும், ஆடும், ஈடு, உழும்*

C) அழும், ஈடு, ஆடும், உழும் D) அழும், ஈடு, உழும், ஆடும்.

41. அகர வரிசைப் படி சொற்களைச் சீர் செய்க.

A) சக்கரம், சாட்சி, சித்திரை, சாலை

B) சக்கரம், சாலை, சாட்சி, சித்திரை

C) *சக்கரம், சாட்சி, சாலை, சித்திரை*

D) சக்கரம், சித்திரை, சாட்சி, சாலை.

VIDIYAL

*42.* சொற்களை ஒழுங்குபடுத்திச் சொற்றொடராக்குக.

A) முன்னாள் நாடளுமன்ற உறுப்பினர்

B) உறுப்பினர் நாடாளுமன்ற முன்னாள்

C) நாடாளுமன்ற உறுப்பினர் முன்னாள்

D) *நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்.*

*43.* சொற்களை ஒழுங்குபடுத்திச் சொற்றொடராக்குக.

A) அறிஞர் பேசினர் விழாவில் பலர்

B) பலர் பேசினர் அறிஞர் விழாவில்

C) *விழாவில் அறிஞர் பலர் பேசினர்*

D) விழாவில் பல அறிஞர் பேசினர்.

*44.* சரியான சொற்றொடரைத் தேர்வு செய்க.

A) *அவலா கொன்றோ நாடா கொன்றோ*

B) கொன்றோ நாடா கொன்றோ அவலா

C) நாடா கொன்றோ அவலா கொன்றோ

D) கொன்றோ அவலா நாடா கொன்றோ.

*45.* முறையாக அமைந்த சொற்றொடரைத் தேர்வு செய்க.

A) பணி செய்து கிடப்பதே என் கடன்

B) கிடப்பதே என் கடன் பணி செய்து

C) *என் கடன் பணி செய்து கிடப்பதே*

D) கிடப்பதே என் கடன் செய்து பணி.

*46.* பெயர்ச்சொல்லின் வகையறிக – 'புரட்டாசி'

A) தொழிற்பெயர் B) சினப்பெயர் C) *காலப்பெயர்* D) பொருட்பெயர்.

*47.* பெயர்ச்சொல்லின் வகையறிக – 'வயல் வெளி'

A) பொருட்பெயர் B) காலப்பெயர் C) *இடப்பெயர்* D) தொழிற்பெயர்.

*48.* பெயர்ச்சொல்லின் வகையறிக – 'கிளை'

A) பொருட்பெயர் B) காலப்பெயர் C) *இடப்பெயர்* D) தொழிற்பெயர்.

*49.* பெயர்ச்சொல்லின் வகையறிக – 'குழந்தை'

A) *பொருட்பெயர்* B) காலப்பெயர் C) இடப்பெயர் D) தொழிற்பெயர்.

*50.* இலக்கணக்குறிப்பறிக – 'உறவு'

A) குற்றியலுகரம் B) *முற்றியலுகரம்* C) முற்றெச்சம் D) பெயரெச்சம்.

*51.* இலக்கணக்குறிப்பறிக – 'இரு வினையும்'

A) குற்றியலுகரம் B) *முற்றும்மை* C) முற்றெச்சம் D) முற்றியலுகரம்.

*52.* இலக்கணக்குறிப்பறிக – 'தூஉ'

A) இன்னிசையளபெடை B) *இசைநிறை அளபெடை*

C) ஒற்றளபெடை D) சொல்லிசையளபெடை.

*53.* இலக்கணக்குறிப்பறிக – 'புறநகர்'

A) வினைத்தொகை B) பண்புத்தொகை

C) *இலக்கணப்போலி* D) அன்மொழித் தொகை.

VIDIYAL
VIDIYAL

54. இலக்கணக்குறிப்பறிக – ‘வட்டக்கல்’

A) வினைத்தொகை B) *பண்புத்தொகை*

C) இலக்கணப்போலி D) அன்மொழித் தொகை.

55. இலக்கணக்குறிப்பறிக – ‘பொற்புயம்’

A) மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்கத் தொகை

B) பண்புத்தொகை C) *உவமைத்தொகை* D) அன்மொழித் தொகை.

56. விடைக்கேற்ற வினாவைத் தேர்ந்தெடுத்தல்

‘மனிதன் சத்தியத்தைக் காப்பாற்ற வேண்டும்.’

A) மனிதன் எதற்காக் காப்பாற்ற வேண்டும்?

B) மனிதன் எப்படிக் காப்பாற்ற வேண்டும்?

C) *மனிதன் எதனைக் காப்பாற்ற வேண்டும்?*

D) மனிதன் ஏன் காப்பாற்ற வேண்டும்?.

57. விடைக்கேற்ற வினாவைத் தேர்ந்தெடுத்தல்

‘திருக்குறளை இயற்றியவர் திருவள்ளுவர்’

A) திருவள்ளுவர் இயற்றிய நூல் எது?

B) *திருக்குறளை இயற்றியவர் யார்?*

C) திருவள்ளுவர் எந்நூலை இயற்றினார்?

D) திருக்குறளை இயற்றியவர் திருவள்ளுவரா?

58. விடைக்கேற்ற வினாவைத் தேர்ந்தெடுத்தல்

‘அறிவு அற்றம் காக்கும் கருவி’

A) *அழிவில் இருந்து காக்கும் கருவி எது?*

B) அற்றம் என்பது என்ன?

C) அற்றம் என்பது என்ன வகை கருவி?

D) அறிவு எத்தகைய அற்றங்களைக் காக்கும்?

59. எவ்வகை வாக்கியம் எனக்கண்டு எழுதுக.

‘விடியலை அனைவரும் விரும்புவர்’

A) *உடன்பாட்டு வாக்கியம்* B) எதிர்மறை வாக்கியம்

C) செய்தி வாக்கியம் D) உணர்ச்சி வாக்கியம்.

60. எவ்வகை வாக்கியம் எனக் கண்டெழுதுக.

‘தமிழ்ப்பற்று அற்றவர் எவரும் இலர்’

A) உடன்பாட்டு வாக்கியம் B) *எதிர்மறை வாக்கியம்*

C) செய்தி வாக்கியம் D) உணர்ச்சி வாக்கியம்.

61. எவ்வகை வாக்கியம் எனக் கண்டெழுதுக.

‘சிறந்த நூல்களை அரங்கேற்றுதல் பழைய கால வழக்கம்’

A) கலவை வாக்கியம் B) தனி வாக்கியம்

C) *செய்தி வாக்கியம்* D) உணர்ச்சி வாக்கியம்.

62. எவ்வகை வாக்கியம் எனக் கண்டெழுதுக.

தன்னலமற்றிரு

A) தனிவாக்கியம் B) எதிர்மறை வாக்கியம் C) *கட்டளைவாக்கியம்* D) செய்திவாக்கியம்.

VIDIYAL VIDIYAL

63. எவ்வகை வாக்கியம் எனக்கண்டு எழுதுக.
'செம்மொழி மாநாடு எதை உணர்த்துகிறது'
A) *வினா வாக்கியம்* B) தனிவாக்கியம்
C) கட்டளைவாக்கியம் D) உணர்ச்சி வாக்கியம்.

64. எவ்வகை வாக்கியம் எனக்கண்டு எழுதுக.
'ஒரு குயில் சோலையில் கூவுகிறது'
A) *தனிவாக்கியம்* B) எதிர்மறை வாக்கியம்
C) செய்தி வாக்கியம் D) உணர்ச்சி வாக்கியம்.

65. எவ்வகை வாக்கியம் எனக்கண்டு எழுதுக.
நோய் கடுமையாக இருந்தது, எனினும் மருத்துவரிடம் செல்லவில்லை
A) தனிவாக்கியம் B) *தொடர் வாக்கியம்*
C) வினா வாக்கியம் D) உணர்ச்சி வாக்கியம்.

66. எவ்வகை வாக்கியம் எனக்கண்டு எழுதுக.
'கண்ணனைப் பாட்டுப் பாடும் படி இராமன் சொன்னான்'
A) நேர்க்கூற்று வாக்கியம் B) *அயற் கூற்று வாக்கியம்*
C) கலவை வாக்கியம் D) தொடர் வாக்கியம்.

67. செய்வினை வாக்கியம் எது என அறிக.
A) பாடம் என்னால் படிக்கப்பட்டது B) பாடம் நான் படித்தேன்
C) பாடம் என்னை படித்தது D) *நான் பாடம் படித்தேன்.*

68. செயப்பாட்டு வினையைக் கண்டறிக.
A) யார் இக்கவிதையை இயற்றினார் B) தமிழ் மொழி மிகவும் இனிமையானது
C) *பாண்டியன் பரிசு பாவேந்தரால் படைக்கப்பட்டது.* D) பாவேந்தர் பாண்டியன் பரிசைப் படைத்தார்.

69. 'பூங்குழலி ஆடினாள்' – எவ்வகை வாக்கியம் என்பதை அறிக.
A) செய்வினை B) செயப்பாட்டு வினை
C) *தன்வினை* D) பிறவினை.

70. 'சீதா கற்பித்தாள்' – எவ்வகை வாக்கியம் என்பதை அறிக.
A) செய்வினை B) செயப்பாட்டு வினை
C) தன்வினை D) *பிறவினை.*

71. உவமையால் விளக்கப்பெறும் பொருளைத் தேர்க.
சாந்தின் தொடுத்த தீந்தேன் போல
A) *புரையோர் கேண்மை* B) கசப்பு
C) புகழ்ந்து கூறுபவர் D) பயன் தெரிவார்.

72. 'கொங்கலர்த்தார்ச் சென்னி குளிர் வெண்குடை போன்று' – இவ்வுவமையால் உணர்த்தும் பொருள் யாது?
A) உயர்வு B) தாழ்வு C) அழித்தல் D) *காத்தல்.*

73. 'வலம்புரி போல' – உவமை உணர்த்தும் பொருள்.
A) வெண்மை B) இடம்புரி C) *முழக்கம்* D) புகல்.

74. உவமையால் விளக்கப்பெறும் பொருளைத் தேர்க- 'உள்ளங்கை நெல்லிக்கனி போல'
A*) தெளிவு* B) விளக்கம் C) சிறுமை D) உண்மை.

VIDIYAL
VIDIYAL

75. 'உடுக்கை இழந்தவன் கை போல' – உவமை உணர்த்தும் பொருள்.

A) நண்பன் B) துன்பம் C) சுற்றம் D) *நட்பு.*

76. 'மரம் போல்வர்' – உவமைக் கேற்ற பொருள் தேர்க.

A) அன்பு இல்லாதவர் B) *மக்கட் பண்பு இல்லாதவர்*

C) கல்லாதவர் D) நன் மக்கட்பேறு இல்லாதவர்.

77. மோனைத் தொடை அமைந்துள்ள சொற்களைக் காண்க.

A) வசையிலா – குன்றும் B) வண்பயன் – இசையிலா

C) *வசையிலா – வண்பயன்* D) குன்றும் – இசையிலா.

78. 'உள்ளம் உடைமை உடைமை பொருளுடைமை' – இத் தொடரில் அமைந்துள்ள மோனைத் தொடை யாது?

A) இணை மோனை B) *கூழை மோனை*

C) முற்று மோனை D) ஒரூஉ மோனை.

79. 'சிறுமையுள் நீங்கிய இன்சொல் மறுமையும்' – எதுகையைக் காண்க.

A) சிறுமை – இன்சொல் B) இன்சொல் - மறுமை

C) *சிறுமை - மறுமை* D) நீங்கிய – இன்சொல்.

80. 'அறன்கடை நின்றாருள் எல்லாம் பிறன்கடை' – இத்தொடரில் அமைந்துள்ள எதுகைச் சொற்களைத் தேர்க.

A) *அறன்கடை - பிறன்கடை* B) நின்றாருள் - பிறன் கடை

C) அறன் கடை - நின்றாருள் D) எல்லாம் - நின்றாருள்.

81. மடுக்கும் சூழற்கா டேந்துமிள வஞ்சிக்கொடியே வருகவே!
மலயத் துவாசன் பெற்ற பெருவாழ்வே வருக! வருகவே! – இத்தொடரில் அமைந்துள்ள இயைபுத் தொடையைக் காண்க.

A) மடுக்கும் – வஞ்சிக்கொடியே B) *வருகவே - வருகவே*

C) மலயத் துவாசன் – பெற்றபெரு வாழ்வே D) சூழற்காடேந்தும் – இளவஞ்சி.

82. 'அவனிவள் கமலச் செல்வியே' – இவ்வடிகள் பயின்று வந்துள்ள நூல் யாது?

A) சிலப்பதிகாரம் B) *கம்பராமாயணம்* C) குறுந்தொகை D) புறநானூறு.

83. 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' – என்று கூறியவர்.

A) கருணாநிதி B) திருமூலர் C) வள்ளலார் D) *திருவள்ளுவர்.*

84. கம்பரைப் புரந்த வள்ளல் யார்?

A) குமண வள்ளல் B) *சடையப்ப வள்ளல்* C) பாரிவள்ளல் D) பேகன்.

85. உலகச் செவ்வியல் மொழிகளின் எண்ணிக்கை,

A) 5 B) *6* C) 7 D) 8.

86. 'புகழ்' – என்பதன் இலக்கணக் குறிப்பு அறிக.

A) *காரியவாகு பெயர்* B) ஆகுபெயர்

C) உரிச்சொல் தொடர் D) பண்புத்தொகை.

87. மரபுப் பிழையற்ற தொடரைத் தேர்வு செய்க.

A) மருந்து உண்டான் B) *மருந்து அருந்தினான்*

C) மருந்து குடித்தான் D) மருந்து சாப்பிட்டான்.

88. 'ஆண்மான்' – எனும் பொருள் தரும் சொல்

A) கழை B) களை C) *கலை* D) கரிமா.

VIDIYAL VIDIYAL VIDIYAL

89. வழூஉச் சொற்களற்ற தொடரைக் காட்டுக.

A) ஆத்துல மீன்கள் அதிகம் B) ***ஆற்றில் மீன்கள் அதிகம்***

C) ஆட்றில் மீன்கள் அதிகம் D) ஆறில் மீன்கள் அதிகம்.

90. பொருத்துக:

| | | | |
|---|---|---|---|
| a) | நண்பர் | 1. | சுருக்குக |
| b) | பகைவர் | 2. | அருக்குக |
| c) | உண்டி | 3. | பெருக்குக |
| d) | சினம் | 4. | தருக்குக. |

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | 1 | 2 | 3 | 4 |
| B) | ***3*** | ***4*** | ***2*** | ***1*** |
| C) | 3 | 2 | 1 | 4 |
| D) | 4 | 3 | 2 | 1. |

91. 'காவிரிநாடன்' – என்பது யாரைக் குறிக்கும்.

A) ***சோழன்*** B) சேரன் C) பண்டியன் D) அதியன்.

92. பொருத்தமானதைத் தேர்வு செய்க.

A) படமாடக் கோயில் பகவற்கு அதாமே - அப்பர்

B) பண்புடையர் பட்டுண்டுலகம் - திருமூலர்

C) பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான் - கவிமணி

D) ***புதியதோர் உலகம் செய்வோம் - பாரதிதாசன்.***

93. 'ஞானரதம்' – எனும் நூலின் ஆசிரியர்.

A) மறை மலை அடிகள் B) திரு. வி. க

C) ***பாரதியார்*** D) பாரதிதாசன்.

94. பொருத்தமானதைத் தேர்வு செய்க.

A) இன்னொரு சிகரம் - வைரமுத்து

B) சூரிய நிழல் - தமிழன்பன்

C) சேரமான் காதலி - பாரதிதாசன்

D) ***ஊரும் பேரும் - இரா. பி. சேதுப்பிள்ளை.***

95. பொருத்துக:

| | | | |
|---|---|---|---|
| a) | புதுமைக் கவிஞர் | 1. | வாணிதாசன் |
| b) | உவமைக் கவிஞர் | 2. | சுரதா |
| c) | காந்தியக் கவிஞர் | 3. | இராமலிங்கம் பிள்ளை |
| d) | குழந்தைக் கவிஞர் | 4. | அழ. வள்ளியப்பா |

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | ***1*** | ***2*** | ***3*** | ***4*** |
| B) | 3 | 4 | 2 | 1 |
| C) | 3 | 2 | 1 | 4 |
| D) | 4 | 3 | 2 | 1. |

96. மண் தேய்த்த புகழினான் – எனச் சுட்டப்படுபவன் யார்?

A) அனுமன் B) ***கோவலன்*** C) இராமன் D) பரதன்.

VIDIYAL VIDIYAL

97. ‘தமிழ்த் தொண்டன் பாரதிதான் செத்ததுண்டோ!’ – என்று பாடியவர்.

A) கவிமணி B) நாமக்கல் கவிஞர்

C) வாணிதாசன் D) ***பாரதிதாசன்.***

98. நெடுந்தொகை என்றழைக்கப்படும் நூல்.

A) கலித்தொகை B) வெற்றிவேட்கை

C) ***அகநானூறு*** D) குறுந்தொகை.

99. ‘குட்டித் திருவாசகம்’ என்று சிறப்பிக்கப்படும் நூல்.

A) தொன்னூல் விளக்கம் B) நேமிநாதம்

C) அற்புதத் திருவந்தாதி D) ***திருக்குருவைப் பதிற்றுப் பத்தந்தாதி.***

100. பொருத்துக:

| | | | |
|---|---|---|---|
| a) | இயற்கை ஓவியம் | 1. | கலித்தொகை |
| b) | இயற்கை இன்பக்கலம் | 2. | திருக்குறள் |
| c) | இயற்கை வாழ்வில்லம் | 3. | பத்துப் பாட்டு |
| d) | இயற்கை பரிணாமம் | 4. | கம்பராமாயணம். |

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | 1 | 2 | 3 | 4 |
| B) | ***3*** | ***1*** | ***2*** | ***4*** |
| C) | 3 | 2 | 1 | 4 |
| D) | 4 | 3 | 2 | 1. |

VIDIYAL

**IT'S FOR ALL : ONE DAY COACHING CAMP ON *GENERAL TAMIL* @ VELLORE &THIRUVANNAMALAI SOON, BY OUR EXPERT FACULTY Mr.M.KANNAN, M.A,MPhil, B.Ed. FOR FEE & OTHER DETAILS CONTACT: *VIDIYAL* COACHING CENTRES ARNI , VELLORE & POLUR. 9894316951, 9941146326, 9578533174.**

VIDIYAL

***VIDIYAL*** **GROUP-II CLASSES WILL BE STARTED BY NOVEMBER , IN ALL OUR EXISTING BRANCHES. NOTIFICATION EXPECTED IN THE SAME MONTH FOR ABOUT *3000* POSTS INCLUDING KEY POSTS LIKE S.R, AIL, ASO AND MC Etc.**

**ALL THE BEST.**